DINAMANI

4 APR 2022

PAGE 3

# அமெரிக்க இதழில் ஆய்வுக் கட்டுரை: புதுச்சேரி பேராசிரியருக்கு பாராட்டு

**புதுச்சேரி, ஏப். 3:** புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக வேதியியல் துறை பேராசிரியர் சி.சிவசங்கரின் ஆய்வுக் கட்டுரை அமெரிக்க இதழில் பிரதான கட்டுரையாக வெளியானது. இதற்கு கல்வியாளர்கள் பாராட்டு தெரிவித்தனர்.



ஆய்வுக் கட்டுரை வெளியான இதழை புதுச்சேரி மத்திய பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் காண்பித்து வாழ்த்து பெற்ற பேராசிரியர் சி.சிவசங்கர்.

பேராசிரியர் சி.சிவசங்கர் எழுதிய சல்பாக்சோனியம் அலைடு கார்பைனை மூலமாகப் பயன்படுத்தி 'கார்பாக்சிலிக் அமில செயல்பாடு' என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரை அமெரிக்க வேதியியல் அமைப்பின் புகழ்பெற்ற 'தி ஜர்னல் ஆஃப் ஆர்கானிக் கெமிஸ்ட்ரி' இதழில் பிரதான கட்டுரையாக அண்மையில் வெளியானது. இதற்கு புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் கல்வியாளர்கள் சிவசங்கருக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.